தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-4-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் துவக்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 16-04-2018 திங்கட்கிழமை முதல் 20-4-2018 வெள்ளிக்கிழமை வரை 5 நாட்களுக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது. இவ்விழாவிற்கான துவக்கவிழா 16-4-2018 அன்று பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

விழாவின் சிறப்பு விருந்தினராக கோவை மாநகர காவல் துறை ஆணையர் முனைவர் கே. பெரியய்யா அவர்கள் கலந்து கொண்டு மாணவ மாணவியர் அணிவகுப்பைப் பார்வையிட்டு விளையாட்டுப் போட்டிகளைத் துவக்கிவைத்தார். அவர்தனது உரையில் மாணவர்கள் தங்களது தலைமைப் பண்பு, ஒருங்கிணைந்து வழிநடத்துதல், ஒழுக்கம் போன்ற பல்வேறு நற்குணங்களை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் அமைகிறது எனக்கூறி தனது கல்லூரி நாட்களில் மைதானத்தில் பெற்ற பரிசுகளையும், பதக்கங்களையும் நினைவு கூர்ந்தார். மேலும் போட்டித் தேர்வுகளில் விளையாட்டு சம்பந்தமான அறிவை வளர்த்துக் கொள்வது தேர்வுகளில் மேலும் மதிப்பெண் பெற வழிவகை செய்யும் எனவும் ஆலோசனை வழங்கினார்.

ஐந்து நாட்களாக நடைபெறும் இப்போட்டிகளில் 28 வேளாண் கல்லூரிகளைச் சார்ந்த சுமார் 1700 மாணவ மாணவிகள் 16 வகையான போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.

முன்னதாக பல்கலைக்கழக வேளாண்மைக் கல்லூரி முதன்மையர் முனைவர் ச. மகிமைராஜா அவர்கள் வரவேற்புரையாற்றினார். பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் டி. சுதாகர் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். இறுதியாக பல்கலைக்கழக உடற்கல்வித்துறை இயக்குனர் முனைவர் ராகவன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்